**சவுதி நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - 2014**

சவுதி நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2012 ஒத்தோபர் 30 ஆந் திகதிய 9/574 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்குதி**

கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேல் மற்றும் வட மேல் மாகாணங்களிலுள்ள மொத்தம் 138.39 கிமீ நீளமான 09 வீதிப் பிரிவுகளை புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 10,628 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 81.75 மில்லியனானதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 யூன் 03 தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள

தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செயற்திட்டத்தின் செலவினங்கள் முன்னேற்றப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ வேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் செயற்திட்டத்தால் சேர்க்கப்பட்ட ஆலோனையாளர் ஒருவருக்கு முறையே ரூபா 50,646 மற்றும் ரூபா 92,000 ஆன வேதனங்கள் மற்றும் போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செய்றபாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையிவ் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் போது பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| எஸ்எவ்டி-நன்கொடை முகவர் | 60.00 | 7,800 | 1,607.8 | 12.35 | 1,606.4 | 15.33 | 1,993.1 |
| இலங்கை அரசாங்கம் | 21.75 | 2,828 | 79.9 | 0.61 | 79.8 | 0.92 | 120.3 |
| மொத்தம் | 81.75 | 10,628 | 1,687.7 | 12.96 | 1,686.2 | 16.25 | 2,113.4 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், தெகியவிட்ட- தெரணியகல- நூறி விதியின் தெகியவிட்ட தொடக்கம் தெரணியஹல வரையான வீதிப் பிரிவின் புனரமைப்பு வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு75.49 சதவீத முன்னேற்றத்தை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 43.57 சதவீத மந்தமான முன்னேற்றத்தையே காட்டியிருந்தது. மேலும், கண்டி- யாழ்ப்பாணம் வீதியின் பலபத்வேல முதல் நாவுல வரையான பிரிவுகளின் புனரமைப்பு வேலைகள் அத்திகதியில் உள்ளவாறு 85.83 சதவீத புனரமைப்பு வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 22.37 சதவீதமான மிகவும் மந்தமான முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது அத்தகைய தாமதங்களிற்காக காரணங்களை தெரிவித்திருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு இருந்த மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தகாரரால் சீரமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

தெகியவிட்ட முதல் தெரணியஹல வரையான வீதியில் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொகுதி II இன் உப உட்பிரிவு 103.4 ஆம் ஒப்பந்தத்தின் குறிப்பான குறிப்புரைகளிற்கமைய ஒப்பந்தகாரர் சகல சமிஞ்சைகள், விளக்குகள், தடைகள், நெரிசல் கட்டுப்பாட்டு சமிஞ்சைகள், வீதி அடையாளமிடல் போன்றனவற்றை வழங்குதல், நாட்டுதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றின் மூலம் வாகன நெரிசல் மற்றும் மூன்றாம் தரப்பினரின் பாதுகாப்பிற்காக அவசியமான அளவீடுகளை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், வழங்கப்பட்ட பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் மற்றும் நெரிசல் கட்டுப்பாட்டு ஒழுங்குகள் என்பன திருப்திகரமற்றிருந்தது என்று பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. வதிவிடப் பொறியியலாளர் ஒப்பந்தகாரால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வழிகாட்டல்கள் மற்றும் அமுலாக்கப்பட்ட நெரிசல் முகாமைத்துவ திட்டம் என்பவற்றுடன் இணங்காமைக்காக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரணியகல மாவட்ட வைத்தியசாலை, தெரணியகல பிரதேச செயலகம் மற்றும் தெரணியகல பொலிஸ் நிலையம் என்பவற்றுக்கான அணுகு வீதிகள் இந்த செயற்திட்டத்தின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் செயற்திட்டத்தின் கீழ் முன்னேற்றப்பட்டிருந்தது.

(இ) ஆரம்ப கட்டத்தில் அளவீட்டு பட்டியலின் தயாரிப்பு முறைப்படி செய்யப்பட்டிருக்காததின் விளைவால் 2014 திசெம்பர் 31 வரை ரூபா 154.69 மில்லியன் மற்றும் ரூபா 75.17 மில்லியன் பெறுமதியான முரண் கட்டளைகள் என்பன அனுமதிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நெடுஞ்சாலை வடிவமைப்பு பிரிவின் உத்தியோகத்தர்களிற்காக மிகையூதியங்கள் செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2.6 மில்லியன் தொகை செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், அவற்றில் உரிய அமைச்சின் அல்லது அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலையில் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் கடுகஸ்தோட்டை- அலவத்துக்கொட வீதி மற்றும் அலவத்துக்கொட – பலபத்வெல வீதியின் 08 இடங்கள் புவி அதிர்வு காரணமாக அப்பால் விலகியிருந்தது என்று அவதானிக்கப்பட்து.

## 3.5 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அலவத்துக்கொட முதல் பலபத்துவல வீதியின் புனரமைப்பில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு ரூபா 262,904,343 தொகையான 03 இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் 01 நாள் தொடக்கம் 23 நாட்களிற்கு மேலான வீச்சிலான காலதாமங்களுடன் தீர்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால் ரூபா 987,008 தொகையான நிதியளிப்பு கட்டணங்கள் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.